

கும்பகோணத்தில் நடந்த விஸ்வகர்ம முன்னேற்ற சங்க ஆலோசனைக் கூட்டத்தில் திருநெல்வேலி பரசமய கோளரிநாதர் ஆதீனத்தின் இளைய மடாதிபதி சிவராஜ சுவாமிகள் பேசுகிறார். அருகில் விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை நிறுவனர் முருகசெல்வம், அறங்காவலர் கனகராஜ், மாநில துணைத் தலைவர் ஸ்ரீகண்ட ஸ்தபதி மற்றும் நிர்வாகிகள்.

# 100 அடி உயர விஸ்வகர்ம பரப்பிரம்மம் சிலை

## சென்னை அருகே ரூ.50 கோடியில் நிர்மாணம்

## சிவராஜ சுவாமிகள் தகவல்

கும்பகோணம், ஜூன் 2-

உலகிலேயே முதன்முறையாக சென்னை அருகே 100 அடி உயர விஸ்வகர்ம பரப்பிரம்மம் கருங்கல் சிலை ரூ.50 கோடி மதிப்பில் நிறுவப்படவுள்ளதாக திருநெல்வேலி பரசமய கோளரிநாதர் ஆதீனத்தின் இளைய மடாதிபதி சிவராஜ சுவாமிகள் கூறினார்.

தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்கம், விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை சார்பில் ஐம்பெரும் விழா கும்பகோணம் ராயா திருமண மண்ட

5 மணி வரை நடக்கிறது. இதையொட்டி திருநெல்வேலி பரசமய கோளரிநாதர் ஆதீனத்தின் இளைய மடாதிபதி சிவராஜ சுவாமிகள் கூறியதாவது:

விஸ்வகர்ம மணமக்களுக்கு இலவச திருமணம், ஆயிரத்து 500 வரன்களின் போட்டோவுடன் கூடிய குறிப்புகள் அடங்கிய வெளியீடு

விஸ்வகர்ம சாதனையாளர் விருது வழங்கல், விஸ்வகர்ம வரன்களின் நவீன சுயம்வரம் ஆகியவை ஐம்பெரும் விழாவாக நடக்கிறது.

இதில் பல மாவட்டங்களில் இருந்து 10 ஆயிரம் பேர் வரை கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டை ஆண்ட மன்னர்களின் வழிகாட்டுக

ளையும், சிற்பங்களையும், தெய்வ திருமேனிகளையும் படைத்தவர்கள் விஸ்வகர்ம சமுதாயத்தினர்தான்.

இதை உலகுக்கு அடையாளம் காட்டும் வகையில் வேதாந்த சொரூபமான விராட் விஸ்வகர்ம பரப்பிரம்மத்திற்கு உலகிலேயே முதன்முறையாக 100 அடி உயரமுடைய கருங்கல் விக்ரகத்துடன்கூடிய கோயில் கட்டப்படவுள்ளது.

சென்னை -மகாபலிபுரம் இடையே இந்த கோயில் அமையும். வரும் செப்டம்பர் 8ம் தேதி அடிக்கல் நாட்டும் விழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சிவராஜ சுவாமிகள் கூறினார்.

தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க மாநில தலைவர் சேகர், விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் முருகசெல்வம், அறங்காவலர் கனகராஜ், மாநில துணைத் தலைவர் ஸ்ரீகண்ட ஸ்தபதி மற்றும்